**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.66/2025 - PW-9**

| | |
|---|---|
| Name | திரு. பழனி |
| Husband/Father Name | பொன்னன் |
| Village /Area | நெல்வாய் |
| Taluk | நெமிலி |
| Occupation | விவசாயம் |
| Age | 56 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 20.01.2026.

**(எதிரிகள் 2, 5 ஆஜர். எதிரிகள் 3, 4 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 18.01.2025 அன்று சுமார் காலை 11 மணியளவில் நானும் சத்தியராஜும் கல்பலாம்பட்டு மேம்பாலம் வழியாக சென்று கொண்டிருந்த போது போலீசார் அங்கு வாகனங்களை நிறுத்தி விசாரித்து கொண்டிருந்தனர். அப்போது எங்களுக்கு முன்னர் வெங்கடேசன் என்பவரை விசாரித்து கொண்டிருந்தனர். அப்போது வெங்கடேசன் என்பவர் நெல்வாயில் நடந்த கொலை வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரித்தனர். நானும் என்னுடன் வந்த சத்தியராஜும் கையொப்பம் செய்தோம். போலீசார் வெங்கடேசனிமிருந்து இருசக்கர வாகனத்தை கைப்பற்றினார்கள். அந்த மகஜரில் நானும் சத்திராஜும் கையொப்பம் செய்தோம். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்திலுள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அது **அதசாஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைபற்றுதல் மகஜரிலுள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அது **அதசாஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

நானும் சத்தியராஜும் எங்கள் ஊரிலிருந்து காலை சுமார் 10 மணி அளவில் கிளம்பினோம். கல்பலாம்பட்டு வழியாக அனந்தலை செல்வதற்காக அன்றைய தினம் சென்றோம். போலீஸ் விசாரணையில் அனந்தலைக்கு

செல்வதற்காக அந்த வழியாக சென்றோம் என்று கூறினேனா என்றால் கூறினேன். நெல்வாயிலிருந்து கல்பலாம்பட்டு வருவதற்கு 13 கி.மீ. என்னுடைய இருசக்கர வாகனத்தில் தான் நாங்கள் சென்றோம். அதனை நான் தான் ஓட்டினேன். பணப்பாக்கத்திலிருந்து கல்பலாம்பட்டுக்கு வலது பக்கமாக திரும்பி சிறிது தூரம் தள்ளி மேற்கு பக்கமாக செல்ல வேண்டும். மேற்கு பக்கமாக போலீஸ் பூத் இருந்ததா என்றால் இருந்தது. அந்த வழியாக தான் நாங்கள் சென்றோம். கம்பலாம்பட்டு அருகே போலீசார் விசாரித்த போது சுமார் 5, 6 வண்டிகள் இருந்தது. வெங்கடேசனை விசாரிக்கும் போது அங்கு பொது மக்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். அன்றைய தினம் கல்பலாம்பட்டு பாலம் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டிருந்ததா என்றால் அப்போது தான் கட்டுமான பணி துவங்கப்பட்டது. பாலத்துக்கு அருகே உள்ள கோயில் எந்த கடவுளுடையது என்று எனக்கு தெரியாது. ஆனால் கோயில் உள்ளது. போலீசார் நான் கையொப்பம் இட்ட தாளிலுள்ள விவரங்களை கல்பலாம்பட்டு பாலத்துக்கு அருகே தட்டச்சு செய்தார்கள். இரண்டு தாள்களில் தட்டச்சு செய்யப்பட்டது. எந்தெந்த தாளில் என்ன என்ன விவரம் எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. தட்டச்சு செய்த தாளில் கையொப்பம் இட கூறியதன் அடிப்படையில் நான் கையொப்பம் இட்டேன். மற்றபடி எனக்கு வேறு எதுவும் தெரியாது.

**மறு விசாரணை :** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.01.20 18:47:02 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.